# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS) முதல் தகவல் அறிக்கை
~~(Under Section 154 Cr.P.C)~~
(பா.நா.சு. பிரிவு 173-ன் கீழ்) ~~(குற்ற விசாரணை முறை சட்டப்பிரிவு 154-இன் கீழ்)~~

C 8101991

1. District மாவட்டம்: Madurai PS: காவல்நிலையம்: Vand Ac Year ஆண்டு: 2025 FIR No. மு.த.அ. எண்: 02/2025 Date நாள்: 30.01.2025

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by Sections பிரிவுகள்: 7(a) of PC Act 1988
(ii) Act சட்டம்: Prevention of corruption (Amendment) Sections பிரிவுகள்: as amended by PC
(iii) Act சட்டம்: Act 2018. Sections பிரிவுகள்: (Amendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 1) 27.01.25 at 17.30 hrs. 2) 28.01.25 at 12.40 hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 3) 29.01.25 at 1700 hrs. 4) 30.01.25 at 1300 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.01.2025 Time நேரம் 14.30 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30.01.2025 Time நேரம் 15.15 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Petition.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 7 Km, South. B-6,
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Jaihindpuram Police station, Madurai City.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt. T. Kavitha (b) ~~Father's~~/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Thangamurugan.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 19.07.1980 (d) Nationality : நாட்டினம் Indian. (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Fancy store. (g) Address : முகவரி H.M.S. Coloney, 1st street, Amirtha Nagar, Madurai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Shanmuganathan, Sub-Inspector of Police, B-6, Jaihindpuram PS, Madurai City.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached seperate sheet Pages 1 to 4

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Kavitha 30.01.2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 30/1/2025
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 30.01.2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 16.30 hrs.

Name: பெயர் K.KUMARAGURU
Rank: நிலை ...................No. எண் ........
Inspector of Police,
V&AC, Madurai.

அய்யா, பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 30.01.2025-ஆம் தேதி மதியம் சுமார் 14.30 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை, அமிர்தா நகர் 1வது தெரு, H.M.S. காலனி, வசித்து வரும் தங்கமுருகன் என்பவரது மகள் திருமதி.த.கவிதா என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புனர் த. கவிதா, த/பெ. தங்கமுருகன், H.M.S. காலனி, அமிர்தா நகர் 1வது தெரு, மதுரை. பெறுனர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, நான் கடந்த 12.01.2025-ம் தேதி முதல் H.M.S. காலனியில் குடியிருந்து வருகின்றேன். இதற்கு முன்பு நான் மதுரை ஜெய்ஹிந்த்புரம், ஜீவா நகர், 6வது தெரு, பள்ளிவாசல் அருகில் வாடகைக்கு குடியிருந்து வந்தேன். எனது கணவர் பெயர் மகேஸ்வரன் ஆவார். எங்களுக்கு பாலப்பிரியா, நிவேதா மற்றும் கார்த்திகாயினி என மூன்று மகள்கள் உள்ளார்கள். அவர்கள் அனைவருக்கும் திருமணம் ஆகிவிட்டது. நானும் எனது கணவரும் கருத்து வேறுபாடு காரணமாக தற்போது பிரிந்து இருக்கிறோம். மேலும், நான் ஜீவா நகரில் குடியிருந்த போது, ஜெய்ஹிந்த்புரத்தைச் சேர்ந்த உமா, ராணி மற்றும் நந்தனி ஆகியோர் நான் தலைவியாக இருந்து நடத்தி வந்த மகளிர் சுய உதவிக்குழு மூலமாக பழக்கமானார்கள். பிறகு எனக்கும் உமாவிற்கும் மகளிர் குழுவில் உள்ள பயனாளிகளின் ஆவணங்களை நான் வைத்திருப்பது சம்மந்தமாக ஏற்பட்ட பிரச்சனையினால் உமாவை எனது வீட்டிற்கு வரக்கூடாது என கூறியதை மனதில் வைத்துக்கொண்டு உமாவின் சொந்தக்காரர் பகவதிமுருகன், நந்தினி மற்றும் ராணி ஆகியோர் என்னை கடந்த 07.01.2025-ம் தேதியன்று மாலையில் எனது வீட்டு வாசலில் வைத்து, எனது தலையின் பின்புறத்தில் அருவாளால் வெட்டி விட்டு எனது கைப்பேசியை திருடி சென்றுவிட்டார்கள். நான் அக்காயம் காரணமாக மதுரை அரசு மருத்துவமனையில் அன்றைய தினத்திலேயே உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டிருந்தேன். அந்த சம்பவத்திற்காக நான் அரசு மருத்துவமனையில் வைத்து கொடுத்த புகார் மனுவின் பேரில் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலைய குற்ற எண். 30/2025-ன் படி அந்த நான்கு பேர் மீதும் வழக்கு பதிவு செய்தார்கள். மறுநாள், 08.01.2025-ம் தேதி காலையில், ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் என்பவர் மதுரை அரசு மருத்துவமனைக்கு வந்து அங்கு சிகிச்சையில் இருந்த என்னிடம் தன்னை அறிமுகப்படுத்தி கொண்டு, அவர் தான் எனது வழக்கை விசாரிக்கும் அதிகாரி எனக்கூறி என்னை விசாரித்தார். பிறகு அவ்வழக்கில் நந்தினியையும், பகவதிமுருகனையும் கைது செய்து ஜெயிலுக்கு அனுப்பிவிட்டார்கள். அவ்வழக்கு சம்பந்தமாக ஜெய்ஹிந்த்புரம் காவல்

நிலைய சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் என்பவர் கடந்த 20.01.2025-ம் தேதி மாலையில் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையத்தில் வைத்து மீண்டும் என்னை விசாரித்தார். மேலும் குற்ற எண்.30/2025 வழக்கில் நடவடிக்கை எடுத்து உமா மற்றும் ராணி ஆகியோரை கைது செய்து சிறையில் அடைப்பதாக உறுதி கூறியிருந்தார். மேலும் சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவர்கள் தனது கைப்பேசி எண் 98431-18089 யை என்னிடம் கொடுத்து தேவைப்படும் போது வாட்ஸ்அப் காலில் பேசும்படி கூறினார். அதன்பின்னர், என்னை கடந்த 27.01.2025-ம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் மூன்று முறை சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவர்களை அவரது செல்போன் எண் 98431-18089-ற்கு, எனது செல்போன் எண். 63829-90620-லிருந்து வாட்ஸ்அப் காலில் நான் தொடர்பு கொண்டபோது, அவர் எடுக்கவில்லை. பின்னர் மாலை சுமார் 5.30 மணியளவில் சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவரது செல்போனிலிருந்து என்னை தொடர்பு கொண்டு பேசினார். அப்போது நான் அவரிடம் வழக்கினை விரைந்து நடவடிக்கை எடுத்து இருவரை கைது செய்ய பேசிய போது, அவர் உமா மற்றும் ராணி ஆகியோரை கைது செய்யவும், நான் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கின் மீது நடவடிக்கை எடுக்கவும், அவரது செலவுக்காக பணம் ரூ.1,00,000/- கொடுக்க வேண்டும் என கேட்டார். அதற்கு நான் எதற்காக சார் அவ்வளவு பணம் தர வேண்டும் என கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் பணம் கொடுத்தால்தான் மேல் நடவடிக்கை எடுத்து மற்ற எதிரிகளை கைது செய்ய முடியும், இல்லாவிட்டால் நடவடிக்கை எடுக்கமாட்டேன் என கூறினார். அதற்கு நான் சரி பார்க்கிறேன் சார் என கூறிவிட்டேன். பின்னர் 28.01.2025 ஆம் தேதி மதியம் சுமார் 12.40 மணியளவில் சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவர்கள் அவரது கைப்பேசியிலிருந்து எனது கைப்பேசிக்கு இரண்டு தடவை வாட்ஸ்அப் காலில் அழைத்தார், நான் கவனிக்கவில்லை. உடனே நான் சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவர்களை வாட்ஸ்அப் காலில் தொடர்புகொண்டு பேசியபோது அவர் "என்னம்மா பணம் ரெடி பண்ணிவிட்டு வருகிறேன் என்று சொன்னீங்க, பணம் ரெடி பண்ணியாச்சா" என கேட்டார். அதற்கு நான் அவரிடம் நான் பணம் ரெடி பண்ண முடியவில்லை, ஒரு வாரமாவது டைம் வேண்டும் என்று கூறினேன். அதற்கு அவர் ஒரு வாரம் எல்லாம் முடியாது, பணம் ரெடி பண்ணிவிட்டு உடனே ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையம் வரச்சொன்னார். பின்னர் சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவர்கள் மீண்டும் இரண்டு முறை என்னை வாட்ஸ்அப் காலில் தொடர்பு கொண்டு என்னை காவல் நிலையம் வரச்சொன்னார். ஆனால் நான் போகவில்லை. பின்னர் சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவரது கைப்பேசியிலிருந்து எனது கைப்பேசிக்கு வாட்ஸ்அப் காலில் இரவு சுமார் 7.30 மணியளவில் அழைத்தார், நான் எடுக்கவில்லை. பின்னர் 29.01.2025 ஆம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவரது கைப்பேசியிலிருந்து

எனது கைப்பேசிக்கு வாட்ஸ்அப் காலில் தொடர்பு கொண்டு, உடனே மதுரை கோ.புதூருக்கு வந்து அவரை சந்திக்கும்படி கூறினார். அதன்படி நான் மதுரை கோ.புதூருக்கு சென்று மாலை சுமார் 4.50 மணியளவில் சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவர்களை வாட்ஸ்அப் காலில் தொடர்பு கொண்டபோது என்னை அவர் குடியிருந்து வரும் சூர்யா நகர் பகுதியில் உள்ள டான் பாஸ்கோ பள்ளிக்கூடத்தின் நுழைவு வாயில் முன்பாக வரும்படி கூறினார். பின்னர் நான் அவர் சொன்ன டான் போஸ்கோ பள்ளிக்கூடத்தின் நுழைவு வாயிலின் அருகே அப்போது சென்றவுடன், மீண்டும் சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவர்களை வாட்ஸ்அப் காலில் தொடர்பு கொண்டு அவர் சொன்ன இடத்திற்கு நான் வந்த விபரத்தை கூறினேன். சுமார் 10 நிமிடம் கழித்து, அங்கு திரு. சண்முகநாதன் அவர்கள் அவரது இருசக்கர வாகனத்தில் வந்து என்னை சந்தித்தார். அப்போது, நான் அவரிடம் கொடுத்த புகாரின் மீது நடவடிக்கை எடுக்க கேட்டேன். அதற்கு சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவர்கள் வழக்கில் ஏற்கனவே இரண்டு பேரை கைது செய்துவிட்டேன், உமா மற்றும் ராணி ஆகிய இரண்டு பேரையும் கைது செய்து நடவடிக்கை எடுக்க தனது செலவுக்காக ரூ.1,00,000/- கொடுங்கள் என கேட்டார். அதற்கு நான் அவரிடம் என்னால் அவ்வளவு பணம் கொடுப்பதற்கு வசதியில்லை என கூறினேன். அதற்கு அவர் உங்களுக்காக வேண்டுமானால் ரூ.70,000/-மாக குறைத்து கொள்கிறேன். நீங்கள் முதலில் ரூ.30,000/- கொடுங்கள், மீதத்தொகை ரூ.40,000/-த்தை பின்னர் கொடுங்கள் என கூறினார். அப்போது அவரிடம், நான் கொடுத்த புகாருக்கு போடப்பட்ட FIR ன் நகல் கேட்டேன். அதற்கு அவர் FIR நகல் தருகிறேன். முதலில் நான் கேட்ட பணம் ரூ.30,000/-த்தை நாளை 30.01.2025 ஆம் தேதி மாலை சுமார் 4 மணிக்கு நான் சொல்லும் இடத்திற்கு வந்து என்னிடம் கொடுங்கள் என்று கூறினார். நானும் சரி என்று வந்துவிட்டேன். பின்னர் சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவர்கள் மாலை சுமார் 5.15 மணியளவில் மீண்டும் எனக்கு வாட்ஸ்அப் காலில் missed call கொடுத்தார். உடனே நான் அவரை வாட்ஸ்அப் காலில் தொடர்பு கொண்டு பேசியபோது, நீங்கள் கேட்ட FIR நகலை நாளை (30.01.2025) காலை ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையம் வந்து வாங்கிகொள்ளுங்கள் என கூறினார். அதன்படி இன்று 30.01.2025 ஆம் தேதி காலை 10 மணியளவில் நான் எனது கைப்பேசியிலிருந்து சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவர்களை தொடர்பு கொண்டு, FIR நகல் வாங்குவதற்காக எனது மருமகன் திரு.மதனை ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையம் அனுப்பிவைப்பதாக கூறினேன். பின்னர் 11.15 மணியளவில் திரு.சண்முகநாதன் எனது போனில் வாட்ஸ்அப் காலில் பேசி உங்கள் மருமகனை அனுப்பிவிட்டீர்களா என கேட்டார். நான் அனுப்பிவிட்டதாக சொன்னேன். பின்னர் மீண்டும் மதியம் ஒரு மணியளவில் சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் என்னை வாட்ஸ்அப் காலில் தொடர்பு கொண்டு FIR நகல்

கொடுத்து அனுப்பிவிட்ட விபரத்தை சொல்லி, இன்று மாலை தன்னிடம் போனில் பேசிவிட்டு அவர் கேட்ட பணம் ரூ.30,000/-த்துடன் வரும்படி கூறினார். மதுரை ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கின் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ரூ.1,00,000/-ம் கேட்டு, ரூ.70,000/-மாக குறைத்து முதல் தவணையாக ரூ.30,000/- இலஞ்சமாக கேட்கும் சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகார் மனுவை தங்களிடம் கொடுக்கிறேன். இந்த புகார் மனுவுடன் மதுரை மாநகரம், பி6 ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலைய குற்ற எண்.30/2025 வழக்கின் FIR நகலை இணைத்துள்ளேன். மேலும், மதுரை மாநகரம் பி6 ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சண்முகநாதன் அவர்கள் கேட்ட இலஞ்சப்பணம் ரூ.30,000/-த்தையும் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு, (ஒ-ம்) XXXXX (kavitha) 30.1.2025.

Sir, Received the complaint on 30.01.2025 at 14.30 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai Vigilance and Anti-Corruption Cr.No. 02/2025 u/s. 7(a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 15.15 hrs and took up investigation. Sd./-XXXXX (K.Kumaraguru) 30.01.2025, Inspector of Police, V & AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tmt.T. Kavitha D/o.Thangamurugan, H.M.S.Colony, Amirtha Nagar 1st street, Madurai along with xerox copy of Madurai, Jaihindpuram Police Station, Cr.No.30/2025, dated 07.01.2025 are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

30/1/2025

INSPECTOR OF POLICE
Vigilance Anti Corruption
MADURAI